## யூன் – 15 – சனி

### தூய ஜெர்மேன் கூசென்

### அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்: திபா. 103:4

-------------------------------------------------------------------

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 5 : 14 – 21

சகோதரர், சகோதரிகளே! கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்கிறது. ஏனெனில் ஒருவர் அனைவருக்காகவும் இறந்தார். அனைவரும் அவரோடு இறந்தனர். இது நமக்குத் தெரியும்.வாழ்வோர் இனி தங்களுக்கென வாழாமல் தங்களுக்காக இறந்து உயிர்பெற்றெழுந்தவருக்காக வாழவேண்டும் என்பதற்காகவே அவர் அனைவருக்காகவும் இறந்தார்.ஆகவே இனிமேல் நாங்கள் எவரையும் மனித முறைப்படி மதிப்பிடுவதில்லை. முன்பு நாங்கள் கிறிஸ்துவையும் மனித முறைப்படிதான் மதிப்பிட்டோம். ஆனால் இப்போது அவ்வாறு செய்வதில்லை.எனவே ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ!இவை யாவும் கடவுளின் செயலே. அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்குத் தந்துள்ளார். உலகினரின் குற்றங்களைப் பொருட்படுத்தாமல் கடவுள் கிறிஸ்துவின் வாயிலாக அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார்.எனவே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம். கடவுளே எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார். ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம்.நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்

## நற்செய்தி : மத்தேயு 5 : 33 – 37

அக்காலத்தில் இயேசு கூறியதாவது : ”பொய்யாணை இடாதீர். ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை ஆண்டவருக்குச் செலுத்துவீர்” என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின் மேலும் ஆணையிட வேண்டாம் ஏனென்றால் அது கடவுளின் அரியணை.மண்ணுலகின் மேலும் வேண்டாம். ஏனெனில் அது அவரின் கால்மணை. எருசலேம் மேலும் வேண்டாம். ஏனெனில் அது பேரரசரின் நகரம்.உங்கள் தலைமுடியின் மேலும் ஆணையிட வேண்டாம் ஏனெனில் உங்கள் தலைமுடி ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ கறுப்பாக்கவோ உங்களால் இயலாது.ஆகவே நீங்கள் பேசும்போது “ஆம்“ என்றால் “ஆம்“ எனவும் “இல்லை“ என்றால் “இல்லை“ எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது“என்றார்.

**தியானம்:** இன்றைய காலகட்டங்களில் நடைபெறும் நிகழ்வுகளையும், இன்றைய தியான வாசகங்களையும் பார்க்கும் பொழுது, இவை யாவும் எமது பாவங்களின் நிமித்தம் நிகழ்கின்றன என்பதையும், இவ்வாறான பாவவாழ்விலிருந்து விடுபட்டவர்களாக தூய வாழ்வு வாழ எங்களை தயார்படுத்த வேண்டுமென்றும் கூறுகின்றது. இன்று நாங்கள் உலக சிற்றின்பத்திற்கு அடிமைப்படுத்தப் பட்டவர்களாக பணத்தினால் யாவும் செய்து விடமுடியும் என்று இறைவனை மறந்தவர்களாக இரவுபகல் என்று பாராமல் வேலை வேலை அலைந்து திரிகின்றோம். எனவே தான் நற்செய்தி வாசகத்தில் மண்ணுலகில் செல்வத்தைசேர்த்துவைக்கவேண்டாம் விண்ணுலகில் செல்வத்தை சேர்த்து வையுங்கள் என்று கூறுவதைப் பார்க்கின்றோம். (மத் 6:19-21) தற்பொழுது நாங்களே பார்த்துக் கொண்டிருக்கிறோம் பணம், பணம் என்று சேர்த்து வைத்து யாவற்றையும் அனுபவிக்க முடியாமலும், திடீர் மரணங்களினாலும், இயற்கை அழிவுகளினாலும் யாவற்றையும் இழந்துவிடுகின்றோம். எனவேதான் எம் உடலின் ஒவ்வொரு அவயவங்களையும், எமதுசிந்னை,சொல்,செயல ் யாவும் இறைவனுக்கு உகந்தவகையில் பயன்படுத்தும் பொழுது நாங்கள் ஒளியின் மக்களாக மாற்றமடைவோம். “கண்தான் உடலுக்கு விளக்கு..........அது கெட்டுப் போனால் உடல் முழுவதும் இருளாய் இருக்கும்.” (மத்.6:22) எனவே நல்லவற்றைப் பேசவும் நல்லவற்றைப் பார்க்கவும், நல்வழியில் நடக்கவும், ”நானேஉலகின் ஒளி” என்று கூறிய இறைமகன் இயேசுவின் வழியில் வாழந்து மற்றவர்களுக்கு ஒளிகொடுத்து வாழ எங்களைத் தயார்படுத்துவோம்.